## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஒழுங்குபடுத்தும் இயலளவை கட்டியெழுப்புதல் செயற்திட்டம்

### 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமையவும், இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களை தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்பவைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீளளித்தல்களும் செயற்திட்டத்தினால் பேணிவரப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிக்காட்டப்பட்டிருந்தன என்பதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த தேவைப்பாடுகளின் படி மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவையென நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்ராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றுகை

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாவிருந்த தகவல்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 24,032,018 ஆக காணப்பட்டதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினம் ரூபா 29,893,731 ஆகும். 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற 08 மாத காலப்பகுதிக்கான செலவினத்துடன் ஒப்பிடப்பட்ட மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினங்களின் பொழிப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின வகை | 2011 ஆம் ஆண்டிற்கான செலவினம் | 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற எட்டு மாத காலப்பகுதிக்கான செலவினம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மதியுரைச் சேவைகள் | 21,097,012 | 4,486,646 | 25,583,658 |
| பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | - | 1,375,067 | 1,375,067 |
| பயிற்சி மற்றும் செயலமர்வுகள் | 2,935,006 | - | 2,935,006 |
| மொத்தம் | 24,032,018 | 5,861,713 | 29,893,731 |

### 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் விசேட (டொலர்) கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் அத் திகதியில் உள்ளவாறான அக் கணக்கின் மீதி என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| | ஐ.அ.டொ | ரூபா |
|---|---|---|
| 2011 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 55,000 | 6,102,437 |
| கூட்டுக: மீளப்பெறுதல்கள் | 177,661 | 19,539,373 |
| அந்நியச்செலாவணி பரிமாற்று இலாபம் | - | 314,250 |
| | 232,661 | 25,956,060 |
| கழிக்க: மீளெடுத்தல்கள் | (230,000) | (25,653,012) |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 2,661 | 303,048 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்குகள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பயிற்சி மற்றும் செயலமர்வுகள் செலவினத்திற்கிடையே ரூபா 288,676 வேறுபாடொன்று காணப்பட்டது. இதனை கணக்குகளில் கணக்கிணக்கமோ அல்லது சீராக்கமோ செய்திருக்கவில்லை.

(ii) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் வங்கிக் கணக்கொன்றில் ரூபா 1,620,993 பயன்படுத்தாத காசு மீதியொன்று காணப்படுவதாக 2011 திசெம்பர் 31 இல் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில் இது காண்பிக்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(iii) ஐக்கிய இராச்சியத்திலிருந்து வெளியீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக பொதுநலவாய தொலைத்தொடர்பு அமைப்பிற்கு முன்னைய ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா 3,321,245 இல் ரூபா 1,946,178 பெறுமதியான வெளியீடுகள் செயற்திட்டத்திற்குக் கிடைக்காதிருந்தது. அதன் பின்னர் இத்தொகை 2011 ஒக்தோபர் 21 இல் பொதுநலவாய தொலைத்தொடர்பு அமைப்பினால் மீளளிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து பொருட்கள் கிடைக்கப்பெறாமை தொடர்பில் ஏற்பாடொன்று மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், விலைப்பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள், மதியுரைஞரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இறுதி அறிக்கைக்கான அங்கீகாரம் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் கிடைக்கப்பெறாமை காரணமாக மதியுரைஞர்களிற்கும் வழங்கல்களிற்கும் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 26,958,725 கூட்டுமொத்தத் தொகையினை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 3.3 மானிய உடன்படிக்கையுடன் இணங்காமை

மானிய உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.03 ஆம் பிரிவின் படி செயற்திட்டத்தினை கண்காணித்து மற்றும் செயன்முன்னேற்றங்களை மதிப்பீடு செய்து ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் அதன் மீதான செயற்திட்ட அறிக்கையினைத் தயாரித்தல் வேண்டும். இருந்த போதிலும், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய காலப்பகுதிக்காக செயற்திட்டத்தினால் அவ்வாறான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 திட்டமிடல் மற்றும் கண்காணித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் குறித்துரைத்த காலப்பகுதியில் செயற்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்யும் பொருட்டு மாதந்தோறும், காலாண்டுதோறும், வருடாந்தோறும் அடைய எதிர்பார்க்கின்ற நிதிசார் மற்றும் பௌதிக இலக்குகளைக் குறிப்பிட்டு செயற்திட்டத்தின் மொத்தக் காலப்பகுதியினையும் உள்ளடக்கியதாக ஒட்டுமொத்தமான திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். இருந்த போதிலும் செயற்திட்டத்தினால் அவ்வாறானதோர் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறான திட்மொன்றை சமர்ப்பிப்பதற்கு செயற்திட்டம் இணங்கியிருந்த போதிலும் 2012 மே 31 ஆந் திகதி வரை அது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அடையப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளிற்கான பாதீட்டு ஒதுக்கீடுகளுடன் கூடிய பதவியணியின் உயர் மட்டத்தினரால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்களைத் தெளிவாக இனங்காண்டு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த நோக்கங்களிற்கு தேவையான திருத்தங்களை மேற்கொண்டு சரியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் செயற்திட்டத்தின் முழுமையான செயன்முன்னேற்றத்தினை உரிய பிரகாரம் மதிப்பீடு செய்வதற்கும் முடியவில்லை.

இது தொடர்பில் எனது முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் மூலம் முகாமைத்துவத்தின் கவனம் கோரப்பட்டிருந்த போதிலும் 2012 மே 31 ஆந் திகதி வரை காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 நிதிகளின் பயன்பாடு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்காக கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 52,854,276 (ஐ.அ.டொ. 472,634) ஆன நிதியில் மீளாய்வுக் காலப்பகுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 29,893,731 (ஐ.அ.டொ. 267,316) மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.

## 3.6 செயலாற்றல் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கூறு 01 மற்றும் 02 இன் கீழ் ரீஆர்எஸ்எல் இன் பதவியணியினர் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு பயிற்சி நெறிகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 10,059,763 (ஐ.அ.டொ. 88,320) தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இ.தொ.ஒ.ஆ இன் 05 உத்தியோகத்தர்களிற்கு வெளிநாட்டில் பயிற்சிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 3,223,683 (ஐ.அ.டொ. 25,768) ஆன தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்டத்தினால் 2012 மார்ச் 31 ஆந் திகதி வரை எந்தவொரு செயலமர்வும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) விரிவான திட்டமொன்று இன்மை காரணமாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீக செயன்முன்னேற்றத்தினை மதிப்பாய்வு செய்ய முடியவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள திகதியில் எதிர்பார்த்துள்ள இலக்குகளை அடைந்து கொள்வதற்கு செயற்திட்டத்தினால் முடியுமா என்பது தொடர்பில் ஐயப்பாடு நிலவுகிறது.